ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2340/18 - 2023 ජූලි මස 11 වැනි අඟහරුවාදා - 2023.07.11

2340/18 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 11 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

தொடர்பு இல.: கடு/காணி/01/143/WS.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கடுவலை பிரதேச செயலகப் பிரிவு, 494/B, அரங்கல கிராம அலுவலர் பிரிவில் ஹோகன்தர வடக்கு கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள ஆ.தி.கொ. 9999 மற்றும் 2022.10.28 ஆந் திகதிய ஆரம்ப திட்டப்படத்தின் துண்டு இல. 1 எனக் காட்டப்பட்டுள்ள காணித் துண்டின் விபரங்கள்:

01. துண்டு இல. 01

காணியின் பெயர் : நாகஹவத்த அல்லது தபுகஹ வத்த; விபரம் : வீட்டுத் தோட்டம்; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமையாளர் : திரு. பந்துல பிரியங்கர பெரேரா; விஸ்தீரணம் : 0.1546 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 24 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு கடுவலை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 17 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். உரித்தினை உறுதிப்படுத்தக்கூடிய அனைத்து உறுதிப் பத்திரங்கள் மற்றும் ஆவணங்களை பரீட்சிக்குமிடத்து சமர்ப்பித்தல் வேண்டும்.

எச்.எஸ். சம்பத் இடம்கொடகே,
பிரதேச செயலாளர்,
கடுவலை.

பிரதேச செயலகம்,
கடுவலை,
2023, யூன் 30.

EOG 07 - 0072